DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 223 /2021** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : திரு.சசிகுமார் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 25.05.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 25 May 2026**.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல்விசாரணை:</u>

நான் தற்போது கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்துவந்த இரண்டாம் நிலைகாவலர் மாசானம் மற்றும் உதவி ஆய்வாளர் கிருஷ்ணசாமி ஆகியோர்கள் கையொப்பம் நன்கு தெரியும். அவர்கள் தற்போது பணிமாறுதலாகி வேறு மாவட்டங்களுக்கு சென்று விட்டார்கள். வழக்கின் சூழ்நிலைக்கருதி ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 24.09.2019-ம் தேதி 09.00 மணிக்கு இரண்டாம் நிலைகாவலர் மாசானம் நிலையப்பொறுப்பில் இருந்தபோது சென்னிகுளம்

கிராமத்தைச் சேர்ந்த மணிகண்டன் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன்தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண்.336/2019 இ.த.ச.பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2)–ன்படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த புகார் மனு அ.சா.ஆ.4 ஆகும். முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் கிருஷ்ணசாமி அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, அன்றையதினமே 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மகேந்திரன் மற்றும் கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் மணிகண்டன், கருப்பசாமி, சிவன், சரவணகார்த்திகேயன், கார்த்திக் மகேந்திரன் மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த இரண்டாம்நிலைக்காவலர் மாசானம் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தார். காயம்பட்ட சாட்சியான மணிகண்டன் என்பவருக்கு சிகிக்சை அளித்த சங்கரன்கோவில் அரசுமருத்துவமனை மருத்துவர் தேவிபிரபா கல்யாணி என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். **அ.சா.1** மணிகண்டன் **என்பவரின் காயச்சான்று அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. எதிரி திருநெல்வேலி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று பிணையில் சென்றுள்ளார்கள். அத்துடன் வழக்கு விசாரணை முடித்து 18.10.2019–ம் தேதி எதிரிகள் மீது இ.த.ச .பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2)–ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல்விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் புகார் மனுவைப் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடம் சென்று பார்வை

மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.